**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure )**

**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE COURT, HOSUR**

S.C. Case No : 48/2020

Deposition of witness for Prosecution : Pw7

Defence :

Name : Tr.Sridhar
Father's Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed and on date 11.04.2022in accordance with the provision with the Act of 1983.

நான் தற்சமயம் ஓசூரில் வசித்து வருகிறேன். சுந்தியா இன்சினியரிங்கில் வேலை செய்து கொண்டிருந்தேன்.தற்பொழுது சொந்தமாக தொழில் செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 5.10.2019 அன்று சந்தியா இஞ்சினியரிங்கம்பெனி முன்பு வாழை மரம் உள்ளது அதை வெட்டுவதற்காக காலை 8மணிக்கு நான், நாகா, சண்முக சுந்தரம் ஆகியோர் சென்றோம். நாகா வாழை மரத்தை வெட்டினார்.நான் அதை வாங்கி வைத்துக்கொண்டிருந்தேன். ஆப்பொழுது ஆஜர் எதிரி வந்து எச்சில் துப்பினார். அப்பொழுது மகாலட்சுமி வந்தார் . ஏன் எச்சில் துப்புகிறீர்கள் என்று கேட்டார். ஆதற்கு எதிரி அப்படி தான் துப்புவேன் என்று சொல்லி அசிங்கமாக பேசினார். அதன் பின்பு எதிரி வீட்டிற்கு சென்று திரும்ப வந்து காம்பவுண்டு ஓரமாக நின்று கொண்டிருந்தார்.பேசிகொண்டிருந்தார்கள். மெய்யப்பன் சண்டை வேண்டாமென்று அவரது அப்பாவை அழைத்துவந்தார். அப்பொழுது பின்னால் ஓடிவந்து எதிரி கொடுவாலால் சண்முகத்தை வெட்டினார். அதை மெய்யப்பன் தடுத்தார்.அதில் மெய்யப்பனுக்கு கட்டை விரலிலும் ,சண்முகத்திற்கு கழுத்திலும் காயம் ஏற்பட்டது. சுந்ருவிற்கு பெருவிரல் துண்டாகி தொங்கி கொண்டிருந்தது. சுண்முகத்திற்கு கழுத்தில் காயம் ஏற்பட்டது. சுண்முகத்தின் தம்பி கல்யாண் குமார் வந்தார். எதிரி அரிவாளை தூக்கி ரோபாட்டு விட்டு ஓடிவிட்டார். ஏதிரியை பிடிக்க சென்றோம்.ஆனால் அவர் ஓடிவிட்டார். சண்முகத்தை அரசு மருத்துவமனைக்கு அழைத்து

சென்றேன். எமர்ஜென்சி என்பதால் குணம் மருத்துவமனைக்கு மெய்யப்பனையும்.சண்முகத்தையும் சிகிச்சைக்கு அழைத்து சென்றோம்.அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறக்கு விசாரணை

நான் தான் சண்முகத்தையும்,மெய்யப்பனையும் சிகிச்சைக்கு சேர்த்தேன்.அது பற்றி மருத்துவர் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளார். நூான் அ.சா.1டம் வேலை பார்த்தேன்.அதனால் எனக்கு அவர்களை தெரியும். அ.சா.1ன் கம்பெனி சம்பவ இடத்தில் இல்லை.எச்சிடு பேட்டரி கம்பெனி அருகில் உள்ளது.எச்சிடு பேட்டரி கம்பெனி சம்பவ இடத்தில் இருந்து 6 கி.மீ தூரத்தில் உள்ளது. சுண்முகத்தின் தம்பி பெயர் கல்யாண குமார். கல்யாண் குமார் சம்பவம் முடிந்த பின்பு வந்தார் என்று சொன்னால் சரிதான். சம்பவம் கேட்டிற்கு முன்பு வைத்து நடைபெற்றது. சம்பவத்தன்று காலை 10.30மணிக்கு போலிசார் என்னை குணம் மருத்துவமனையில் விசாரித்தார்கள். குணம் மருத்துவமனையில் வைத்து நான் சொல்ல சொல்ல வாக்குமூலம் எழுதினார்கள். கேட்டிற்கு அருகில் ஒரு வேப்பமரம் உள்ளது. இடது கை பெருவிரல் துண்டாகி மெய்யப்பனுக்கு தொங்கி கொண்டிருந்தது. அ.சா.1 சண்முகத்திற்கு 4இன்ச்க்கு மேல் கழுத்தில் காயம் ஏற்பட்டிருந்தது. நான் சொல்வது போல் அ.சா.1க்கு கழுத்தில் 4இன்ச் அளவில் காயம் இல்லை என்று சொன்னால் சரயல்ல. நான் சொல்வது போல் மெய்யப்பனின் விரல் துண்டாகி தொங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. போலிசார் என்னை குணம் மருத்துவமனையில் விசாரித்த பின்பு விசாரணை செய்யவில்லை. கேட்டிலிருந்து 5 அடி தூரத்தில் ரோட்டில் சம்பவம் நடைபெற்றது. எதிரி தூக்கி எறிந்த கொடுவாள் எங்கிருந்தது என்று எனக்குத் தெரியாது. ஆதனால் எதிரி பயன்படுத்திய கொடுவாளின் அளவு கைப்பிடி பற்றிய விவரங்கள் எனக்குத் தெரியாதுஎன்று சொன்னால் சரிதான். அ.சா.1 நிறுவன்தில் வேலை செய்வதால் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.